எனது தலைமையில் செயல்படும் தமிழக அரசைப் பொறுத்தவரையிலும் விடுதலைப் புலிகளுடன் சமரசம் என்கின்ற பேச்சுக்கே இடமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அச்சம் என்ற சொல் எங்கள் அகராதியில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் முன்னேற்றமும், அவர்தம் சீரிய நல்வாழ்க்கையும்தான் எங்களது ஒரே குறிக்கோள். (மேசையைத் தட்டும் ஒலி) எத்தகைய இடர்பாடுகள் வந்தாலும், இன்னல்கள் வந்தாலும் அவற்றை எல்லாம் சமாளித்து, சட்ட ஒழுங்கை நிலைநாட்டி, தமிழகத்தை ஒரு அமைதிப் பூங்காவாக என்றென்றும் தொடர்ந்து வைத்திருப்போம் (மேசையைத் தட்டும் ஒலி). என்பதை மட்டும் இந்தப் பேரவைக்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

27-2-1995 அன்று தப்பிச் சென்ற 9 விடுதலைப் புலிகளில் இரண்டு பேர் அன்று இரவே பிடிபட்டு விட்டார்கள். இரண்டு பேர் மரணமடைந்து விட்டார்கள். மீதமுள்ள 5 பேரை, விரைவில் கண்டுபிடிப்பதற்குத் தமிழக அரசும், காவல் துறையும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-45

(ஆ) அண்ணா பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியை அரசு, செய்தி மற்றும் சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், அண்ணா பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த நிலத்தின் ஒரு பகுதி பற்றிய பிரச்சினையைப் பேரவையின் விதி 110-ன் கீழ் பேரவைக்கு வெளியிட அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்போது அந்த அறிவிப்பினைப் பேரவைக்கு வெளியிடுவார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக் கழகத்திற்கு அரசினால் கொடுக்கப்பட்ட நிலத்தை இதுவரையிலும் அந்தப் பல்கலைக் கழகம் உபயோகப்படுத்தாத நிலத்தின் ஒரு பகுதியை, அரசினுடைய செய்தி மற்றும் சுற்றுலாத்துறைக்கு ஒதுக்கீடு செய்தது பற்றிய அறிக்கை.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசுத் துறைகளும், அரசுச் சார்புத் துறைகளும் மேலும் மேலும் வளரவேண்டும் என்பதற்காக, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். எல்லாத் துறைகளையும், காவல் துறையையும் ஒரே மாதிரியாகக் கருதுகிறார்கள். ஆனால் சில அரசியல் கட்சிகள், சாதாரண விஷயங்களை அரசியலாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோலத்தான், இந்த அண்ணா பல்கலைக் கழக நிலம் சம்பந்தப்பட்ட விவரங்களையும் அரசியலாக்கிட முடிவு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு, அரசினுடைய கடமையும் உரிமையும் என்ன என்பதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1957 ஆம் ஆண்டு தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் தனித் துறையாக உருவாக்கப்பட்டு அதற்கென அப்போதைய அரசு, சென்னை கிண்டியில் 202.50 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்தது. அதன் பிறகு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசில் தொழில் நுட்பக் கல்வித்துறை வளர்ச்சியாகி தனியாகப் பல்கலைக் கழகம் தேவை என்பதை உணர்ந்து, 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ந் தேதி அண்ணா பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது. அப்போது தொழில் நுட்பக் கல்வித் துறையைச் சேர்ந்த (குறுக்கீடு)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன இருக்கிறது ? (குறுக்கீடு) அமைச்சர் முடிக்கட்டும். (குறுக்கீடு) பேரவைக்கு அரசாங்கத்தின் சார்பில் ஒரு அறிவிப்பைக் கொடுப்பதற்கு அமைச்சருக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடு) சோர்ட் விஷயத்திற்குள் போகவில்லை. நான் பார்த்து விட்டுத்தான் அனுமதி வழங்கியிருக்கிறேன். (குறுக்கீடு) நான் அனுமதி வழங்கியிருப்பதை நீங்கள் கேட்கமுடியாது. (குறுக்கீடு) வழக்கு மன்றத்திலே இருக்கிற பிரச்சினைக்குள்ளே போகவில்லை. (குறுக்கீடு) ஆனால் அதுபற்றிய விவரத்தைச் சொல்வதில் தப்பு கிடையாது உட்காருங்கள். (குறுக்கீடு) கொடுத்தது சரியா, தப்பா, எடுத்தது சரியா, தப்பா என்று இருக்கலாம். ஆனால் மாண்புமிகு அமைச்சர் என்ன நடந்திருக்கிறது என்ற விவரத்தைத்தான் சொல்கிறார். (குறுக்கீடு) இது பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது. (குறுக்கீடு) வழக்கு மன்றத்தில் இருக்கிற விவகாரத்தின் உள்ளேபோய் அறிக்கை விடவில்லை. அந்த மாதிரி இல்லை. (குறுக்கீடு) வழக்கு மன்றத்தில் இருக்கிற அந்தப் பிரச்சினையின் உள்ளே போய், அலசி ஆராய்கிற மாதிரி இது இல்லை. மேலெழுந்த வாரியாக இந்த விவரத்தைப் பேரவைக்குத் தெரிவிக்கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். சில விவரங்களை அவைக்குத் தெரிவிக்கவே கூடாது என்று நீங்கள் சொல்லக்கூடாது. உட்காருங்கள். நான் அவருக்கு

அனுமதி அளித்திருக்கிறேன். (குறுக்கீடு) நான் அனுமதி அளித்த பிறகு நீங்கள் குறுக்கிடக்கூடாது. வழக்கு மன்றத்தில் இருக்கிற எந்தப் பிரச்சினையும் இங்கே சொல்லப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-50

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ந் தேதி அண்ணா பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது. அப்போது தொழில் நுட்பக் கல்வித் துறையைச் சேர்ந்த நிலத்தில் 144 ஏக்கர் நிலம் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், 26-10-1979 அன்று அண்ணா பல்கலைக் கழகத்திற்கு சென்னை மாவட்டத்திலும், மறுபடியும் செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள திருவான்மியூரில் 49.22 ஏக்கரும், கானகம் கிராமத்தில் 1.10 ஏக்கரும், தரமணியில் 92.67 ஏக்கரும், கொட்டிவாக்கத்தில் 13.94 ஏக்கரும், பெருங்குடியில் 43.07 ஏக்கரும், ஆக 200 ஏக்கர் கொடுக்கப்பட்டது. இந்தக் கிராமங்களில் உள்ள 200 ஏக்கர் நிலத்தை ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் முதலில் கொடுத்தது, கோட்டூர்புரத்தில் 124.05 ஏக்கர், அடையாறில் 19.5 ஏக்கர், ஆக 144 ஏக்கர். அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள நிலங்கள் 3 இடங்களில் 3 பகுதிகளாக தனித்தனியாக இருக்கின்றன. அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 144 ஏக்கர், தரமணியில்—இரண்டாவது இடத்தில்—92.67 ஏக்கர், பெருங்குடியில் 43.07 ஏக்கர், ஆக நான் சொல்கின்ற இந்த 3 இடங்களிலுள்ள நிலங்களில், தரமணியிலும் பெருங்குடியிலும் இருக்கிற—ஒரே இடத்தில் இருக்கிற 135.74 ஏக்கர் முழுமையும்—கொஞ்சமாவது அண்ணா பல்கலைக் கழகத்தால் 16 ஆண்டுகளாக இதுவரையிலும் பயன்படுத்தப்படவில்லை. மூன்றாவதாக, கொட்டிவாக்கத்தில் 13.94 ஏக்கர், திருவான்மியூரில் 49.2 ஏக்கர், கானகத்தில் 1.05 ஏக்கர்—இவை 64 ஏக்கர். இரண்டாம்தரம் கொடுத்தது 200 ஏக்கர், முதலிலே கொடுத்தது 144 ஏக்கர்; ஆக மொத்தம் அண்ணா பல்கலைக் கழகத்தின் வசத்தில் இருப்பது 344 ஏக்கர்.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், கிண்டியில் தொழில் நுட்ப கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்ட 144 ஏக்கர் நிலம், அண்ணா பல்கலைக் கழகம் நிர்வாகக் கட்டிடம், விளையாட்டுத் திடல், விவசாய மாதிரிப் பண்ணை, அலுவலர் குடியிருப்பு, பூங்கா போன்ற பல்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்திற்குக் கட்டடங்கள் சேர்ந்தாற்போல் கட்டப்படாமல் இங்கொன்றும் அங்கொன்றுமாகக்

கட்டப்பட்டு உள்ளதால், இவ்வளாகத்தில் ஆங்காங்கே காலி நிலம் உள்ளது. தேவையானால் இவ்விடத்தைப் பல்கலைக் கழகம் பயன்படுத்திக் கொள்ளலாம். மொத்தமாக பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்ட நிலம், முதலிலே சொன்னவாறு 344 ஏக்கர் ஆகும். இப்போதுதான் உங்களுக்கு ஒரு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அப்படியே வாசிக்கலாம். அப்போதுதான் நீங்கள் விளக்குவது வரிசையாகப் போகும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசு சார்ந்த துறைகளும், அரசு சார்ந்த நிறுவனங்களும் மற்றும் தனியார் நிறுவனங்களும் சமுதாய நலன் கருதி அரசு நிலம் வேண்டும் எனக் கேட்பது நடைமுறையில் உள்ளது. அரசு, அதன் தேவையையும் தகுதியையும் கருதி, கேட்கப்பட்ட இடத்தைப் பொறுத்து அரசு நிலங்களை ஒதுக்கீடு செய்யும். மேலும் நிலம் தேவைப்படின், அரசு நிலங்கள் இல்லாவிட்டால், தனியார் நிலங்களை கையகப்படுத்திக் கொடுப்பதும் அரசினுடைய கடமையாகும். அரசு ஒரு துறைக்கு நிலம் கொடுப்பதும், அரசு ஒரு துறைக்கு நிலம் ஒதுக்கீடு செய்வதும், அந்த இடத்தை முழுமையாக அந்தத் துறை பயன்படுத்தாதபோது, தேவைப்படும் மற்ற துறைகள் கோரும்போது அந்த நிலத்தைப் பங்கிட்டு அளிப்பதும் அரசினுடைய அதிகார வரம்புக்கு உட்பட்ட ஒன்றாகும். (குறுக்கீடு)

திரு. ச. அழகிரி : பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கோர்ட்டில் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அழகிரி, அடிக்கடி இந்த மாதிரி தொந்தரவு செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ச. அழகிரி : அதிகார வரம்புக்கு உட்பட்டு..... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிகார வரம்புக்குள் இது இருக்கிறது என்பது அரசினுடைய வாதம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : Rule 92 says....... (interruptions)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : In Rule 92, any matter.... (குறுக்கீடுகள்) அரசாங்கத்துக்கு இருக்கிற இந்த உரிமையைக் கோர்ட் ஒன்றும் பண்ணவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டு அரசு செயல்படுகிறபோது அந்தச் செயலைத் தடுத்து நிறுத்த முயலுவது, அரசின் அதிகாரத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்கு ஒப்பாகும். அரசுத் துறைக்கு அரசு நில நிர்வாக ஆணையத்தின் மூலம் ஒப்படை செய்வது அரசின் விதியாகும். கோரிய நிலம் எந்தத் துறைக்கு ஒப்படை செய்யப்பட்டதோ, எந்தக் காரியத்திற்காகக் கொடுக்கப்பட்டதோ, அந்தக் காரியத்திற்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அந்தத் துறை தன்னிச்சையாக முடிவெடுத்து வேறொரு அரசுத் துறைக்கு அல்லது நிறுவனத்திற்குக் கொடுக்க அதிகாரம் இல்லை. ஏனெனில் பல துறைகளுக்கு நிலம் தேவைப்படுகிறபோது அதனுடைய தேவையைக் கருதி வரன்முறைப்படுத்துகிற அதிகாரம் அரசுக்குத் தான் உண்டு. ஒப்படை செய்யப்பட்ட நிலம் அரசுத் துறையானாலும், அரசுத் துறை சார்ந்த நிறுவனமானாலும் உரியமுறையில் பயன்படுத்தாவிடில், தேவையானபோது அரசு அந்த நிலத்தைத் தேவைப்படுகிற துறைக்குக் கொடுக்கிற அதிகாரம் அரசுக்கு உண்டு.

200 ஏக்கரில், இதுவரையில் அண்ணா பல்கலைக் கழகம் 3 ஏக்கர் நிலத்தை மட்டும் கடந்த 15, 16 ஆண்டுகளில் பயன்படுத்தியுள்ளது. இதன் அடிப்படையில்தான், அண்ணா பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட, 16 ஆண்டுக் காலத்தில் பயன்படுத்தாத நிலத்தை பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் கோரிக்கையை ஏற்று, சமுதாய வளர்ச்சி கருதி அரசு ஒதுக்கீடு செய்தது. அப்படி அண்ணா பல்கலைக் கழக வளாகத்திலும் மற்றும் தரமணியில் உள்ள நிலங்களில் அரசு புள்ளியியல் மையம், 'டாட்டா செண்டர்'-க்குக் கொடுத்தது 18.50 ஏக்கர். தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு Technical Teachers' Training Institute-க்குக் கொடுத்தது 5 ஏக்கர். 1982 ஆம் ஆண்டில் மனநலம் குன்றிய குழந்தைகள் காப்பகத்திற்காகக் கொடுத்தது 5 ஏக்கர். 1993 ஆம் ஆண்டு மத்திய அரசு தொழில் துறையின் தொழில் பொருட்காட்சி ஆணைக் குழுவிற்கு Trade Fair Authority of India-க்குக் கொடுக்கப்பட்டது 30 ஏக்கர். 1994 ஆம் ஆண்டு இந்திய நிதி மேலாண்மை ஆராய்ச்சிக் கழகம் Institute of Finance Management Authority-க்கு கொடுத்தது 10 ஏக்கர். ஆக மொத்தம் 68.50 ஏக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கு அண்ணா பல்கலைக் கழகத்தினுடைய நிலத்தை அரசு கொடுத்தபோது யாரும் எதுவும் பேசவில்லை. தற்போது தமிழக அரசின் துறையான செய்தி மற்றும் காவல் துறை நடத்துகிற திரைப்பட நகர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செய்தி மற்றும் சுற்றுலாத் துறை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தற்போது தமிழக அரசின் துறையான செய்தி மற்றும் சுற்றுலா துறை நடத்துகிற திரைப்பட நகர் வளாகத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்ததை அரசியல் கண்ணோட்டத்துடன் தவறான பிரசாரத்தில் ஈடுபடுகிறார்கள். திரைப்பட நகர் விரிவாக்கத்திற்காக கொடுக்கப்பட்ட நிலம் 47.36 ஏக்கர் ஆகும். இதில் மத்திய அரசின் தொழில் துறையின் தொழில் பொருட்காட்சி ஆணைக் குழுவிற்கு கொடுக்கப்பட்ட நிலம் 30 ஏக்கரை, Trade Fair Authority of India திருப்பி தமிழக அரசு எடுத்துக் கொண்டது. திருப்பி அரசு எடுத்துக் கொண்டால் அந்த நிலம் அரசுக்கு தான் சொந்தம். இந்த 30 ஏக்கர் தமிழக அரசுக்கு சொந்தமானதாகும். மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் (Director of Technical Education) மூலமாக 7.14 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. மொத்தமாக கொடுக்கப்பட்ட 47.36 ஏக்கர் நிலத்தில் அண்ணா பல்கலைக் கழகத்திலிருந்து தற்போது எடுக்கப்பட்ட நிலம் 10.22 ஏக்கர் மட்டுமே.

நண்பகல் 12-00

அண்ணா பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்டு, உபயோகப்படுத்தாத நிலத்தில் மிக மிகச் சிறிய பகுதியான 10.22 ஏக்கர் நிலத்தை அரசுத்துறை நடத்தி வருகிற திரைப்பட நகருக்குக் கொடுக்கப்பட்டதை சில அரசியல் கட்சிகள் பூதாகரமாக அண்ணா பல்கலைக் கழகத்தின் நிலம் பறிபோயிற்று, பறிபோயிற்று, பறிபோயிற்று, அதற்காகப் போராடுவோம், போராடுவோம் என்று உண்மை தெரியாமல் சில அறிவிப்புகளை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போதாவது கொஞ்சமாவது அவர்களுக்கு உண்மை விளங்கும் என்று மனதார நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தற்போது குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட 200 ஏக்கர் நிலத்தில் அண்ணா பல்கலைக் கழகத்திடம் உபயோகப்படுத்தப்படாமல் உள்ள நிலம் 141.78 ஏக்கர். இந்த நிலத்தில் மற்ற துறைக்கு ஒதுக்கப்பட்டது போக அண்ணா பல்கலைக் கழகம் உபயோகப்படுத்தாமல் உள்ள நிலங்களைச் சொல்ல வேண்டும் என்றால், தரமணியில் 92.67 ஏக்கர், பெருங்குடியில் 43.07 ஏக்கர், கொட்டிவாக்கத்தில் 5.66 ஏக்கர், திருவான்மியூரில் 0.38 ஏக்கர், இவை எல்லாம் ஒரே இடத்தில் இருக்கின்றன. அண்ணா பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், அதனுடைய தேவைக்கேற்ப நிலம் வழங்குவதற்கு அரசு எப்போதும் தயாராக உள்ளது. நிலத் தட்டுப்பாட்டினால் அண்ணா பல்கலைக் கழக வளர்ச்சிக்கு பாதகம் இல்லாமல் புரட்சித் தலைவி அரசு பார்த்துக் கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி).

மத்திய அரசு தொழில்துறையில் உள்ள தொழில் பொருட்காட்சி ஆணைக் குழு, Trade Fair Authority of India, அரசுக்கு வருவாய் ஈட்டக்கூடிய ஒரு ஆக்கப்பூர்வமான நிறுவனம் ஆகும். அதேபோல்தான் டாக்டர் ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகரம் என்பதும் அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனம் ஆகும். அரசுக்கு வருவாய் ஈட்டக்கூடிய ஒரு ஆக்கப்பூர்வமான பணி செய்யக்கூடிய நிறுவனமாகும். அரசுத் துறைகளானாலும் சரி, அரசு சார்பு நிறுவனங்களானாலும் சரி, மற்றும் அண்ணா பல்கலைக் கழகம் போன்ற கல்வி நிறுவனங்களானாலும் சரி, அதனுடைய வளர்ச்சிப் பணிகளில், நிலப் பற்றாக்குறையினால், பாதிப்பு ஏற்படாதவாறு புரட்சித் தலைவி அரசு எப்போதும் பார்த்துக் கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

3. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்படவேண்டும்.

திரு. சோ. இராசாராமன், இருக்கையில் இல்லை. முன்மொழியப்படவில்லை. திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

"1. டான்சி நிறுவனத்தில் தேவைக்கு அதிக அளவில் பணியில் உள்ளவர்களை அவர்களுடைய பணிக்குத் தகுந்தாற்போல் ஏனைய அரசு நிறுவனங்களில் நியமனம் செய்வது குறித்தும்;

2. சென்னை பக்கிங்ஹாம் கால்வாயை ஆழப்படுத்தி படகுகள் விடச் செய்வது பற்றியும் -

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது".

திரு. எஸ். டேனியல்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதாவது தெரிகிறதா, தீர்மானத்தை முன்மொழிந்து வழிமொழிய வேண்டும் என்று. (குறுக்கீடு). வழிமொழிய வேண்டியதில்லை என்று ஒரு தடவை விவகாரம் பண்ணிப் பார்த்தீர்கள். (குறுக்கீடு). திரு. சி. ஞானசேகரன்.